# மனிதநேய கவசம்

மாத இதழ்

**MANITHA NEIYA KAVASAM**

मणिथानेय कवसम्

Run by **Humanity Protection Organization**

(Registered by Govt. of India)

Registration No. **TNTAM/25/A2910**

கவசம் Volume 1

₹12/- நவம்பர் 2025

இதழ் Issue 2

E-331/48, Meenakshi Road, TVS Nagar, Madurai - 625003. Ph : 0452-2600105




25.10.2025 சனிக்கிழமை மாலை 7.00 மணியளவில் மதுரை பைபாஸ் ரோடு **EMAR** மஹாலில் **"மனிதநேய கவசம் மாத இதழ் நூல் வெளியீடு"** நிகழ்ச்சியில் போக்குவரத்து காவல் உதவி ஆணையர் திரு. த. இளமாறன் அவர்கள் நூலை வெளியிட்டு, குமார் மெஸ் சேர்மன் திரு. த. இராமச்சந்திரகுமார், திருப்பரங்குன்றம் அறங்காவலர் முனைவர். வ. சண்முகசுந்தரம் ஆகியோர் நூலை பெற்றுக்கொண்டார்கள். மதுரை மாநகர் காவல் ஆணையர் முனைவர் ஜெ. லோகநாதன் **IPS** அவர்களுக்கு நினைவுப்பரிசை, இதழ் ஆசிரியர் முனைவர். ந. அசோகன் அவர்கள் வழங்கினார். அருகில் **ADSP** (ப.நி.) திரு. சு. குமரவேல்




## கோல்ட்ரிப் மருந்தில் அழகு சாதன தயாரிப்புக்கான மூலப்பொருள் கலப்பு : விசாரணையில் தெரியவந்துள்ளது


hpo.kavasam@gmail.com | www.hpokavasam.org | 98650 91526, 99525 33887



DIWALI DHAMAKA SALE
பட்டுப் பாரம்பரியத்துடன் தங்கத்தின் ஐஸ்வர்யம்...
ராஜ்மஹால்
ஐஸ்வர்யம்
தங்கம் ✦ வெள்ளி ✦ வைரம் ✦ பிளாட்டினம்
தங்கநகை மாளிகை
191, கீழவாசல், மதுரை - 625 001. போன் : 74488 80740

# ஆசிரியர் பார்வை....

அன்பார்ந்த வாசகர்களே...

வணக்கம், மனிதநேய கவசம் மாத இதழ் வாயிலாக பிரதி மாதமும் தங்களை சந்திப்பதில் பெருமிதம் கொள்கிறேன்.

கடந்த மாதம் 25.10.2025 அன்று மதுரை EMAR மஹாலில் மனிதநேய கவசம் மாத இதழின் முதல் பிரதி வெளியீட்டு விழா சிறப்பாக நடைபெற்றது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்விதழ் மாதாமாதம் புதிய தகவல்களுடன் வெளிவந்து பொதுமக்களை சென்றடைந்து பல விழிப்புணர்வுகளை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

இந்த இதழில்.... இன்றைய காலங்களில் மாணவ, மாணவிகள், பொதுமக்கள், இளையோரிடம் ஏற்படும் வைட்டமின் 'டி' குறைபாடு, மெட்ராஸ் 'ஐ' கண் பாதிப்பை கவனிக்கத்தவறினால் அது மூளை வரை எவ்வாறு பாதிக்கும் என்றும், குழந்தைகளுக்கு கொடுக்கப்பட்ட இருமல் மருந்தினால் ஏற்பட்ட விளைவுகள் குறித்தும், ATM மோசடி, ஆன்லைனில் வேலை வாங்கித் தருவதாக மோசடி போன்ற மோசடிகள் குறித்தும் இன்றைய தலைமுறையினர் எவ்வாறு விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும் என இவ்விதழில் பிரசுரித்திருக்கிறோம்.

மேலும் பொது மக்களும், இளையோரும், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை எவ்வாறு அணுகுவது, தகவல்களை எவ்வாறு பெறுவது குறித்தும் தெளிவான விளக்கங்களை இவ்விதழில் பிரசுரித்திருக்கிறோம். தாங்கள் படித்து பயனடையும்படி கேட்டுக்கொள்கிறோம்.

மீண்டும் தங்களுக்கான புதிய தகவல்களுடன் அடுத்த இதழில்.... வணக்கம்...

**முனைவர் ந. அசோகன்,** பதிப்பாசிரியர் (பொ)

## அவசர உதவி எண்கள்

| | |
|---|---|
| தீயணைப்பு மற்றும் மீட்புத் துறை **101** | குழந்தைகளுக்கான அவசர உதவி **1098** |
| விபத்து - போக்குவரத்து விதிமீறல் **100 / 103** | அவசர உதவி தேசிய நெடுஞ்சாலையில் **1033** |
| ஆம்புலன்ஸ் **102 / 108 / 1066** | அவசர உதவி ரத்த வங்கி **1910** |
| பெண்களுக்கான அவசர உதவி **181 & 1091** | கண் வங்கி அவசர உதவி **1919** |
| மின்சாரம் உதவி **1912** | பேரிடர் கால உதவி **1077** |
| சைபர் குற்றங்கள் தடுப்பு **1930** | பள்ளி கல்வித்துறை உதவி **14417** |

அவசர காலம் மற்றும் விபத்து மூத்த குடிமக்களுக்கான **1099**

மனிதநேய கவசம் 1 | இதழ் 2 | நவம்பர் 2025

நிறுவனர் மற்றும் வெளியீட்டாளர், ஆசிரியர்
முனைவர் **ந. அசோகன்** M.A.,

துணை ஆசிரியர்கள்
Er. **மு. குமரன்** B.Tech.,

இணை ஆசிரியர்கள்
முனைவர் **க. ஜெயசங்கர்** D.M.E.,
முனைவர் **ப. கார்வாணன்**
முனைவர் **ப. கணேசன்**
முனைவர் **வ. சண்முகசுந்தரம்** M.A.,
திரு. **R. முருகானந்த்**
திரு. **B. பாலாஜி**
முனைவர் **கோ. ஜவஹர்** B.Tech.,
திரு. **இரா. இராமச்சந்திரகுமார்** D.Pharm.,
திரு. **ச. குமரவேல்** B.Sc., M.A.,
(ப.நி., கூடுதல் காவல் கண்காணிப்பாளர்)
முனைவர் **பா. சேசுராஜா** M.Sc., B.Ed.,
திரு. **காந்திலால் D. பட்டேல்**
திரு. **N. சிவானந்தம்** D.M.E.,

உதவி ஆசிரியர்கள்
முனைவர் **சு. முருகன்**
M.A.,M.A.,M.A.,M.Ed.,M.Phil.,Ph.D.,PGDJMC, DTE
திரு. **க. ஜெயசீலபாண்டியன்**
திரு. **நீ.கி. கார்த்திக்** B.C.A.,
திரு. **ச. தாமோதரன்**

நிர்வாக மேலாளர்
திருமதி. **கோ. ஜெயலெட்சுமி** B.B.A.,

சிறப்பு நிருபர்
திரு. **சி. குட்லக் முருகன்** D.F.S.,
திரு. **R. முருகன்** B.A.,

புகைப்பட கலைஞர்
திரு. **ச. ராஜாகண்ணன்** D.M.E.,
திரு. **R. சுரேஷ்**

சட்ட ஆலோசகர்கள் மதுரை உயர்நீதி மன்ற வழக்கறிஞர்
திரு. **கு. சாமித்துரை** B.A.,B.L.,
திரு. **ஜோ. அழகுராம் ஜோதி** B.A.,B.L.,
திரு. **மா. ஞானகுருநாதன்** M.A.,B.L.,
திரு. **இரா. செல்வராஜ்** B.Sc.,B.L.,

வெளியீட்டாளர் அலுவலக முகவரி :
மனிதநேய கவசம் மாத இதழ்
இ-331/48, மீனாட்சி ரோடு, TVS நகர்,
மதுரை - 625 003.

பிரிண்ட் பெயர் மற்றும் முகவரி :
Dr. **இரா. கண்ணன்** M.D.(E),
**சுந்தரராஜா பிரிண்டர்**
25B, R.M.S. காலனி, 4வது கிராஸ் தெரு,
முத்துப்பட்டி, மதுரை - 625 003.

இணையதளம் உருவாக்கம்
திரு. **மூ. குட்டிசங்கர்** B.Sc.,M.B.A.,
Ungal.com

தொலைபேசி எண் :
98650 91526, 99525 33887

மின்னஞ்சல் :
hpo.kavasam@gmail.com, www.hpokavasam.org

கதைகளில் இடம்பெறும் சம்பவங்களும் பெயர்களும் கற்பனையே, விளம்பரங்களின் நம்பகத்தன்மைக்கு 'மனிதநேய கவசம்' பொறுப்பல்ல

Subject to Madurai Jurisdiction

# இதழின் உள்ளே...

கோல்ட்ரிப் மருந்தில் அழகு சாதன தயாரிப்புக்கான மூலப்பொருள் சேர்ப்பு... விசாரணையில் அம்பலம் ................. 5

இளையோரிடம் அதிகரிக்கும் 'விட்டமின் டி' குறைபாடு 'ஏசி' அறையில் வேலை செய்பவர்கள் கவனம் ......... 7

ATMல் பணம் வராமல் வெறும் டெபிட் SMS மட்டும் வருகிறதா?? அதற்கு என்ன செய்ய வேண்டும்? ................................ 9

செல்போனை ஏன் 100 சதவீதம் சார்ஜ் செய்யக்கூடாது ................................ 10

இந்திய இளைஞர்களை வைத்து கம்போடியாவில் இருந்து ஆன்லைன் மோசடி ........................ 11

மெட்ராஸ் ஐ : கவனிக்காமல் விட்டால் கண்பார்வை, மூளை வரை பாதிப்பு கவனம் தேவை ................. 13

'ஜான்சன் அண்டு ஜான்சன்' குழந்தைகள் பவுடரின் புற்றுநோயை ஏற்படுத்தும் ஆபத்து ......... 16

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்படி (ACT) தகவல் வேண்டுவோர் கவனிக்க வேண்டியவை.. ...................... 17

சமூக ஆர்வலர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கூடாது.. உச்ச நீதிமன்றம் அதிரடி தீர்ப்பு..!! ...................... 18

Director, M. Kutti Sankar B.Sc.,M.B.A.



# கோல்ட்ரிப் மருந்தில் அழகு சாதன தயாரிப்புக்கான மூலப்பொருள் கலப்பு : விசாரணையில் தெரியவந்துள்ளது

மத்திய பிரதேசத்தில், 22 குழந்தைகள் இறப்புக்கு காரணமான, கோல்ட்ரிப்' மருந்துக்கு பயன்படுத்தப்பட்ட, 'புரோப்பிலின் 'கிளைக்காய்' மூலப்பொ ருள். அழகு சாதன பொருட்கள் தயாரிக்க பயன்படும் வகையை சார்ந்தது என மருந்து கட்டுப்பாட்டுத் துறை ஆய்வில் தெரிய வந்துள்ளது.

மத்திய பிரதேச மாநிலம் சிந்திவாரா மாவட்டத்தில், 'கோல்ட்ரிப்' மற்றும், மீநெக்ஸ்ட்ரோ டி.எஸ். என்ற இருமல் மருந்து குடித்த 12 குழந்தைகள் சிறுநீரகம் செயலிழந்து உயிரிழந்தனர். அதேபோல, ராஜஸ்தான் மாநிலத்திலும் குழந்தைகள் உயிரிழந்துள்ளனர்.

இதில், கோல்ட்ரிப் மருந்து, தமிழகத்திலும், நெக்ஸ்ட்ரோ டி.எஸ். மருந்து, குஜராத் மாநிலத்திலும் தயாரிக்கப்பட்டுள்ளது. குஜராத் மாநிலத்தில், அந்த மருந்து நிறுவனத்தின் உரிமம் ரத்து செய்யப்பட்டு, நிறுவனமும் மூடப் பட்டுள்ளது.

தமிழகத்தில், கோல்ட்ரிப் மருந்து தயாரித்த, ஸ்ரீசன் பார்மா நிறுவனத்தின் உற்பத்தி மட்டுமே நிறுத்தப்பட்டுள்ளது.




விரைவில் மூடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் ஸ்ரீசன் பார்மா நிறுவனத்தின் உரிமையாளர் ரங்கநாதன் 75, அவரது நிறுவனத்தின் மேலாளர் ஜெயராமன், ஆய்வக உதவியாளர் மகேஸ்வரி ஆகியோரை, மத்திய பிரதேச போலீசார் கைது செய்தனர்.

இந்நிலையில், கோல்ட்ரிப் மருந்து தயாரிக்க பயன்படுத்தப்பட்ட, 'புரோப் பிலின் கிளைக்கால்' மூலப்பொருள், மருந்து தயாரிப்புக்கான மூலப் பொருளாக இல்லாமல், அழகு சாதனப்பொருட்கள் தயாரிக்க பயன்படும். மூலப்பொருள் என்பது விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இதுகுறித்து, மருந்து கட்டுப்பாட்டுத்துறை அதிகாரிகள் கூறியதாவது:

புரோப்பிலின் கிளைக் கால் வேதிப்பொருளில் இரண்டு வகைகள்; ஒன்று மருந்து தயாரிக்க பயன்படு கிறது. மற்றொன்று, அழகு சாதன பொருட்கள் தயா ரிக்க பயன்படுகிறது.

காய்ச்சல், இருமல் மருந்துகள் தயாரிக்கும் போது, அதிலுள்ள

வேதிப்பொருட்கள் எளிதில் கரைய, புரோப்பி லின் கிளைக்கால்‘ என்ற மூலப் பொருட்களை பயன்படுத்துவர்.

இந்த மூலப்பொருளை பயன்படுத்தும் போது, டை எத்திலீன் கிளைக் கால் என்ற ரசாயனம், 0.5 வரை மட்டுமே உருவாகும். இந்த அளவு, மனிதர்களுக்கு பெரிய பாதிப்புகளை ஏற்படுத்தாது. இந்த புரோப்பிலின் கிளைக்கால் தயாரிக்கும் நிறுவனங்கள், 250 லிட்டர் பேரலில் தான் விற்பனை செய்கின்றன.

ஆனால், சிறு, குறு மருந்து தொழிற்சாலைக ளுக்கு, மாதம், 25 லிட்டர் அளவு தான் தேவையாக உள்ளது. ஒரே நேரத்தில், 250 லிட்டர் வாங்கினால், 10 மாதம் வரை தேக்கமடையும்.

எனவே, சிறு, குறு நிறுவனங்கள், சில்லரை விற்பனையகங்களில், தங்களின் தேவைக்கு ஏற்ப, ‘புரோப்பிலின் கிளைக்கால்‘ மூலப்பொருளை வாங்கி பயன்படுத்துகின்றன. இதில், கலப்பட மூலப் பொருட்களும் விற்பனை செய்யப்படுகின்றன.

இவ்வாறு வாங்கும் மூலப்பொருட்களை, மருந்து தயாரிக்கும் நிறு வனங்கள் தான் பரிசோதித்து, அதன் தன்மையை உறுதி செய்ய வேண்டும். ஸ்ரீசன் நிறுவனம், மூலப்பொருட்களையும் பரிசோதிக்கவில்லை. மருந்து தயாரித்த பின் உருவாகும், ‘டை எத்திலீன் கிளைக்கால்‘ அளவையும் பரிசோதித்து உறுதி செய்ய வில்லை.

ஸ்ரீசன் பார்மா நிறுவனம் தயாரித்த, ‘கோல்ட் ரிப்‘ மருந்துக்கு, அழகு சாதன பொருட்கள் தயா ரிக்க பயன்படுத்தும், ‘புரோப்பிலின் கிளைக் கால்‘ மூலப்பொருளை, சில்லரை விற்பனையகத்தில் வாங்கியுள்ளனர். வழக்கமாக வாங்கும் சில் லரை விற்பனையகம் என்பதாலும், அவர்கள் வேறு வகையான தரச்சான்று அடிப்படையில் அதை விற்றுள்ளனர்.


ஸ்ரீசன் பார்மா நிறுவனம், மூலப்பொருளின் தன்மையை ஆராயாதது டன், மருந்து தயாரிப்புக் கான தார்சான்றிழ் இல்லாமல், அந்த மூலப்பொருள் வந்ததையும் கவனிக்க தவறிவிட்டனர் ‘புரோப்பிலின் கிளைக்கால் வகையை பயன்படுத்தும்போது, 0.1 சதவீதம் மட்டுமே, ‘டை எத்திலீன் கிளைக்கால்’ உருவாகும். இது, மனிதர் களுக்கு பெரிய அளவில் பாதிப்பை ஏற்படுத்தாது.

அதேநேரம், பெயின்ட். அழகு சாதன பொருட் கள் தயாரிப்பதற்கான, ‘புரோப்பிலின் எக் கால்‘ பயன்படுத்தினால் ’டை எத்திலீன் கிளைக் காய் அளவுக்கு அதிகமாக இருக்கும்.

இந்நிறுவனம், அந்த புரோப்பிலின் கிளைக்கால் பயன்படுத்தியதால், 46.6 சதவீதமாக டை எத்தி லீன் கிளைக்கால்‘ அதிக ரித்து, குழந்தைகளின் சிறு நீரகத்தை பாதித்துள்ளது.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

# இளையோரிடம் அதிகரிக்கும் 'விட்டமின் டி' குறைபாடு 'ஏசி' அறை வேலையில் கவனம் தேவை




அதிக நேரம் 'ஏசி' அறையில் வேலை பார்க்கும் இளையோரிடம் 'விட்டமின் டி' குறைபாடு அதிகரித்து வருகிறது என்கிறார் மதுரை அரசு மருத்துவமனை அகச்சுரப்பியல் துறைத் தலைவர் டாக்டர் ஸ்ரீதர்.


**அவர் கூறியதாவது :** சூரியஒளியில் உள்ள புறஊதாக்கதிர்கள் நமது தோலில் படும் போது விட்டமின் டி உற்பத்தியாகிறது. கல்லீரல்,சிறுநீரகம் போன்றவை விட்டமின் டி உற்பத்திக்கு முக்கிய காரணங்கள். தோலில் இருந்து ரத்தநாளங்கள் வழியாக குடலுக்குச் சென்று அங்கிருந்து கல்லீரல், சிறுநீரகங்களுக்கு சென்று 'ஆக்டிவ் விட்டமின் டி' உருவாகிறது.

பால், பால் தொடர்பான பொருட்கள், முட்டைகோஸ், காலி பிளவரில் விட்டமின்டி அதிகமாக உள்ளது. சால்மன் மீனில் அதிகளவு விட்டமின் டி உள்ளது. மீன் எண்ணெய் மாத்திரைகளும் சாப்பிடலாம்.

**குறைபாடு யாருக்கு வரும் :**

வெளியில் செல்லாமல் அறைக்குள்ளேயே இருக்கும் வயதானவர்கள், குழந்தைகள், கர்ப்பிணிகளுக்கும் விட்டமின் டி குறைபாடு வரலாம்.

குடல் பிரச்சனை, கல்லீரல், சிறுநீரக நோய் உள்ளவர்கள், ஸ்டீராய்டு, வலிப்பு நோய்க்கான மாத்திரைகளை சாப்பிடுபவர்களுக்கு இப்பிரச்சனை வரலாம். அடிக்கடி எலும்பு முறிவு ஏற்படுபவர்களும் இத்தகைய அதிக 'ரிஸ்க்' வகை பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்கள் ஆண்டுக்கு




ஒருமுறை விட்டமின் டி ரத்தப்பரிசோதனை செய்ய வேண்டும்.

கருப்பாக உள்ளவர்களுக்கு (டார்க் ஸ்கின்), சன் ஸ்கிரீன் கிரீம் அதிகம் பயன்படுத்துபவர்களுக்கு விட்டமின் டி பற்றாக்குறை வரும் வாய்ப்பு அதிகம். ஏசி அறையில் வேலைபார்ப்பவர்கள், குளிர் பிரதேசத்தில் இருப்பவர்களுக்கு விட்டமின் டி பற்றாக்குறை ஏற்படும்.

தமிழகத்தில் அரசு மருத்துவமனை அகச்சுரப்பியியல் துறையில் விட்டமின் டி ரத்தப்பரிசோதனை இலவசமாக செய்யப்படுகிறது. முழு உடல் பரிசோதனை யிலும் இப்பரிசோதனை செய்யப்படுகிறது.

இதில் விட்டமின் டி குறைபாடு கண்டறியப்பட்டால் கூடுதலாக கால்சியம் அளவையும் பாரா தைராய்டு ஹார்மோன் பரிசோதனையும் செய்ய வேண்டும்.

விட்டமின் டி அளவு 10 முதல் 20 வரை இருக்கலாம். அதற்கும் கீழே இருந்தால் பற்றாக்குறை என்று அர்த்தம். இதற்கான தீர்வும் எளிது தான். விட்டமின் டி மாத்திரை, மருந்துகள் உள்ளன. வாரத்திற்கு ஒருமுறை வீதம் எட்டு வாரங்களுக்கு எடுத்துக் கொண்டால் பற்றாக்குறை சரியாகும். இதனால் பக்க விளைவு ஏற்படாது.

சிலநேரங்களில் சத்து ஊசி என்ற பெயரில் மாதம் ஒருமுறை விட்டமின் டி மருந்தை செலுத்தும் போது விட்டமின் டி அதிக ரிக்க வாய்ப்புள்ளது. டாக் டர் ஆலோசனையின்றி இதை பயன்படுத்தக்கூடாது.

**அறிகுறிகள் என்ன :**

கை, கால் வலி, அதிக உடல் சோர்வு இருக்கலாம். எலும்பு வலி இருந்தால் விட்டமின் டி பரிசோதனை செய்வது அவசியம். சிறுவயதிலேயே எலும்பு முறிவு ஏற்பட்டாலும் பரிசோதனை செய்ய வேண்டும்.

சூரியஒளி நம் உடல் மேல்படுவது அவசியம். மதிய நேரத்தில் வரும் சூரிய ஒளியில் தான் அதிக விட்டமின் டி கிடைக்கும். ஆனால் உச்சிவெயிலில் நிற்பது கடினம். அதனால் குழந்தைகள், வயதானவர்களை கூடுமான வரை சூரியஒளியில் தினமும் சில நிமிடங்கள் நிற்கவும் வெயிலில் நடக்கவும் பழக் கப்படுத்த வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

# ATM ல் பணம் வராமல் வெறும் டெபிட் SMS மட்டும் வருதா...?? அதுக்கு என்ன பண்ணனும் தெரியுமா...??



தற்போதைய காலகட்டத்தில் மக்கள் அனைவரும் **ATM** கார்டு வைத்திருப்பது வழக்கமான ஒன்றாக உள்ளது. மேலும், இந்த டெபிட் கார்டுகள் இருப்பதால் மக்கள் அதிக அளவில் கையிருப்பில் பணத்தை வைத்து கொள்ளாமல், அக்கவுண்டில் தேவைப்படும் போது வைத்து ஸ்கேன் செய்து பயன்படுத்தி வருகிறார்கள். மேலும், சில சமயங்களில் **ATM** மையத்திற்கு சென்று பணம் எடுக்கும் போது பணம் வெளியே வராமல், உங்கள் அலைபேசிக்கு **SMS** வாயிலாக பணம் டெபிட் ஆகி விட்டது என்ற செய்தி மட்டும் வரும். அவ்வாறு **ATM**ல் பணம் வராமல் வெறும் டெபிட் **SMS** மட்டும் வந்தால் என்ன செய்ய வேண்டும்?


அதாவது, **ATM**ல் ஏதேனும் தொழில்நுட்ப கோளாறுகள் ஏற்பட்டால், இவ்வாறான இன்னல்களை சந்திக்க நேரிடும். அதனால் தான் வங்கிகள் குறுகிய கால வரையறைக்குள் **ATM** மெஷின்களை பழுது பார்ப்பது உண்டு. மேலும், **ATM**ல் ஹேக்கர்களால் சில மோசடிகளும் நிகழலாம்.

எனவே நீங்கள் பணத்தை எடுக்க கார்டை உள்நுழைக்கும் முன் ஸ்லாட்டை சரிபார்க்க வேண்டும். ஏனெனில், அதில் சிறிய காந்த பட்டை பொறுத்தப்பட்டிருக்கும். இதில உங்கள் தரவுகள் ஹேக்கர்களுக்கு சென்றடையும், இதன்மூலம் அவர்கள் உங்கள் பணத்தை திருடலாம்.

எனவே, உங்களுக்கு பணம் வராமல் வெறும் டெபிட் **SMS** மட்டும் வந்தால், உடனே உங்கள் குறிப்பிட்ட வங்கியின் 24 மணி நேர வாடிக்கையாளர் சேவையை தொடர்பு கொள்ள வேண்டும். அவர்கள், உங்கள் பரிவர்த்தனை குறிப்பு எண்ணை பதிவு செய்து, புகார் கண்காணிப்பு எண்ணை உங்களுக்கு வழங்குவார். பின்னர், உங்கள் புகார் **RBI** கீழ் விசாரிக்கப்பட்டு, 5 நாட்களுள் உங்கள் பணம் உங்கள் கணக்கில் வரவு வைக்கப்படும். அப்படி எதுவும் வரவு வைக்கப்படவில்லை என்றால், நீங்கள் வங்கி கிளையை நேரடியாக அணுகி புகார் அளிக்க வேண்டும்.

# செல்போனை ஏன் 100 சதவீதம் சார்ஜ் செய்யக்கூடாது?

செல்போனை இரவு முழுவதும் சார்ஜ் செய்யும் வழக்கத்தை சிலர் பின்பற்றுவதுண்டு. 100 சதவீதம் சார்ஜ் ஆன பிறகும் இரவு முழுவதும் செல்போன் சார்ஜ் கனெக்ஷனுடனே இருக்கும். அப்படி சார்ஜ் செய்வது நல்ல தல்ல. நீண்ட நேரம் தொடர்ந்து சார்ஜ் நிலையிலேயே வைத்திருப்பது படிப்படியாக பேட்டரியின் ஆயுளை குறைத்து விடும்.




ஏனெனில் பேட்டரி முழுமையாக சார்ஜ் ஆன பிறகும், சார்ஜ் நிலையிலேயே நீடிப்பது பேட்டரிக்குள் வெப்பத்தையும், அழுத்தத்தையும் உருவாக்கும். அது படிப்படியாக பேட்டரியின் செயல் திறனை குறைத்துவிடும்.

அதனால்தான் பல செல்போன் நிறுவனங்கள் 80 சதவீதம் மட்டுமே சார்ஜ் செய்வதற்கு பரிந்துரைக்கின்றன, அதே சமயத்தில் 20 சதவீதத்துக்கு குறைவான நிலையில் செல்போனில் சார்ஜ் இருப்பதும் நல்ல தல்ல. எப்போதும் செல்போனில் சார்ஜ் அளவு 20 சதவீதம் முதல் 80 சதவீதத்துக்குள் இருப்பது பாதுகாப்பானதாக கருதப்படுகிறது. இந்த நிலையில் பேட்டரி குறைந்த அழுத்தத்திலேயே வைக்கப்பட்டிருக்கும்.

சார்ஜ் சுழற்சியும் மெதுவாக நடந்து முடியும். இதன் விளைவாக பேட்டரிக்கு நீண்ட ஆயுள் கிடைக்கும். சில செல் போன் நிறுவனங்கள் 80 சதவீதம் முதல் 90 சதவீதத்துக்குள் சார்ஜ் செய்யும் வரம்பை நிறுத்துவதற்கு ஏற்ப ஆப்ஷனை வழங்குகின்றன. இது நீண்ட காலத்திற்கு பேட்டரியின் செயல்திறனை உறுதி செய்வதையும், அடிக்கடி பேட்டரி மாற்றுவதற்கான தேவையை குறைப்பதையும் நோக்கமாக கொண்டிருக்கிறது.

செல்போனை இரவு முழுவதும் சார்ஜ் செய்ய விடாதீர்கள். எப்போதும் செல்போனுக்கு பொருத்தமான, ஒரிஜினல் சார்ஜரை பயன்படுத்தவும். வெப்பமான பகுதியில் இருந்தால் சார்ஜ் செய்வதை தவிர்க்கவும். செல்போன் அதிக வெப்பமடைந்தாலும் சார்ஜ் செய்யக் கூடாது.



S.Suresh Call : 98421 50793 , 88383 95692

# இந்திய இளைஞர்களை வைத்து கம்போடியாவில் இருந்து ஆன்லைன் மோசடி

## தப்பி வந்த மதுரை நபரால் வெளிச்சத்திற்கு வந்த மர்மம்
## சிறப்பு பாஸ்போர்ட் மூலம் அனுப்பி வைத்த தூதரக அதிகாரிகள்

டேட்டா என்ட்ரி ஆப்ப எனக்கருது ரேட்டர்' பணி எனக்கருதி கம்போடியா நாட்டிற்கு சென்ற நபர், ஆன்லைன் மோசடியில் ஈடுபடும் கும்பலிடம் சிக்கி, இந்திய துதரகம் மூலம் மதுரை திரும்பினார். இதன்மூலம் இந்தியாவில் நடக்கும் ஆன்லைன் மோசடி கம் போடியாவில் இருந்தும் நடத்தப்படுவது வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

சமீபகாலமாக சமூகவலைத் தளங்களில் வங்கி அனுப்புவது போல் 'லிங்' அனுப்பியும், நண்பர் போல் பழகியும் தனி நபர் வங்கி கணக்கில் இருந்து பணத்தை 'கொள்ளை' அடிப்பது அதிகரித்துள்ளது. இந்த மோசடியின் ஆரம்ப புள்ளி எங்கிருக்கிறது என கண்டறிவது போலீசாருக்கு சவாலாக இருந்தது. இந்நிலையில் மதுரை நபர் மூலம் இந்த மோசடி கம்போடியா நாட்டில் இருந்தும் நடத்தப்படுகிறது என தெரியவந்துள்ளது.

மதுரை பொன்மேனியைச் சேர்ந்தவர் மனோஜ் 31. பி.டெக்., ஐ.டி., முடித்தவர். இவரது சகோதரர் பிரதீப்பிற்கு கூடல்நகர் ராஜசேகர் என்பவர் அறிமு கமானார். தான் தாய்லாந்து நாட்டில் வேலை செய்வ தாகவும், தனது கம்பெனிக்கு 'டேட்டா என்ட்ரி ஆப்பரேட்டர்' பணிக்கு ஆள் தேவை என்றும் கூறினார். மாதம் 1200 டாலர் சம்பளம் கிடைக்கும் என ராஜசேகர் கூறியதை நம்பி மனோஜை சேர்க்க பிரதீப் விரும்பினார். தாய்லாந் தில் இருந்து வாட்ஸ் ஆப் காலில் ராஜசேகர் நேர் முகத்தேர்வு நடத்தினார். இதில் மனோஜ் தேர்வு செய்யப்பட்டு விட்டதாகவும், தாய்லாந்துக்கு செல்ல விமான டிக்கெட், விசா செலவுகளை நிறுவனமே ஏற்றுக்கொள்ளும். பணியில் சேர்ந்த பிறகு தனக்கு ரூ.50 ஆயிரமும், வேலையை உறுதிசெய்ய ரூ.30 ஆயிரம் செலுத்த வேண்டும் என்றும் கூறினார்.

**புனைப்பெயர்களில் மோசடி :**

இதற்கு சம்மதித்த மனோஜ், தாய்லாந்து தலை நகர் பாங்காங் சென்றார். அங்கு காத்திருந்த ராஜசேகரின் கூட்டாளி, அவரை காரில் கம்போடியா நாட் டின் எல்லையில் ஒரு நிறுவனத்திற்கு அழைத் துச்சென்றார். அங்கு ராஜசே கரை மனோஜ் சந்தித்தார். தனது பாஸ்போர்ட்டை ராஜ பெற்றுக்கொண்ட ராஜசேகரிடம், தாய்லாந்தில் வேலை என்றுக்கூறி கம் போடியாவிற்கு அழைத்து வந்துள்ளீர்களே' என மனோஜ் கேட்டதற்கு, 'ஒழுங்கா நாங்க சொல்லும் 'டேட்டா என்ட்ரி' வேலையை மட்டும் பாரு' என மிரட்டினார்.

அங்கு நேபாளம், பாகிஸ்தான், இந்தியாவின் பல்வேறு மாநிலங்களைச்

சேர்ந்தவர்கள் புனைப்பெயரில் பணியாற்றி வரு வதை கண்டு மனோஜ் அதிர்ச்சி அடைந்தார். இவருக்கு ‘ஷாங்கோ‘ என புனைப்பெயரை சூட்டினர்.

**வெள்ளை பாஸ்போர்ட் :**

பின்னர் அவரை ‘பிரியங்கா சர்மா’ என்ற பெயரில் சமூகவலைத் தளங்களில் மெசெஞ்சர் மூலம் பலரை தொடர்பு கொண்டு, அவர்களது விபரங்களை பெற்று வங்கி கணக்கில் இருந்து பணத்தை எடுக்க வேண்டும் என்றனர். உயிருக்கு பயந்து மனோஜ் சிலரிடம் சமூகவலைத்தளங்களில் தொடர்பு கொண்டார்.

அங்கிருந்து தப்பிக்க முடிவு செய்து, சில நாட்கள் கழித்து தனக்கு உடல்நிலை சரியில்லை என ராஜசேகரிடம் கூற, ‘2000 டாலர் கொடுத்து உனது பாஸ்போர்ட்டை பெற்றுக்கொள்‘ என்றார்.

இதனால் ஒரு மாதம் தொடர்ந்து வேலை செய்தார். இதற்காக அவருக்கு 600 டாலர் சம்பளம் தரப்பட்டது.

உடனடியாக கம்போடியாவில் உள்ள இந்திய தூதகரத்தை தொடர்பு கொண்டு தனது நிலையை மனோஜ் தெரிவிக்க, அவர்கள் முயற்சியால் ‘வெள்ளை பாஸ்போர்ட்’ (இந்திய அதிகாரிகள் அரசு பயணமாக செல்லும் போது பயன்படுத்துவது) எடுத்து தரப்பட்டு, அதன் மூலம் நாடு திரும்பினார்.

மோசடிகள் குறித்து மதுரை போலீஸ் கமிஷனர் அலுவலகத்தில் புகார் அளித்தார். அதில், தன்னை போல் தமிழ்நாட்டைச் சேர்ந்த பிரவீன், சாமுவேல் ஜெயராஜ், ஜோஸ்வா, மற்றும் பல மாநில இளைஞர்கள் சிக்கியுள்ளனர். ராஜசேகர், கம்போடியா நிறுவனம் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும், தனது பாஸ்போர்ட்டை பெற்றுத்தர வேண்டும் என தெரிவித்தார்.

மத்திய குற்றப்பிரிவு போலீசார் விசாரிக்கின்றனர்.



# மெட்ராஸ் ஐ: கவனிக்காமல் விட்டால் கண் பார்வை, மூளை வரை பாதிப்பு...

கோடைகாலம் வந்தால் ஆரோக்கியம் சார்ந்த பல பிரச்சனைகள் வரிசை கட்டும். அதில் ஒன்று, கன்ஜங்டிவிடிஸ் **(Conjunctivitis)** நாம் அதை வழக்கத்தில் 'மெட்ராஸ் ஐ' என்று சொல்கிறோம். கண்



எரிச்சல், வலி, உறுத்தல் எனப்படுத்தும் இந்தப் பிரச்சனை, கோடைகாலத்தில் பலரையும் பாதிக்கும். உரிய கவனம் கொடுக்காதபட்சத்தில், கண் பார்வை பாதிப்பு முதல் மூளை வரை பாதிப்பை ஏற்படுத்தும்' என்று கூறும், தென்காசி மாவட்டம், ஆலங்குளம் அரசு மருத்துவமனையைச் சேர்ந்த கண் நோய் சிறப்பு மருத்துவர், மெட்ராஸ் ஐ குறித்து தரும் விழிப்புணர்வு தகவல்கள் இங்கே...

**'மெட்ராஸ் ஐ என்று ஏன் அழைக்கப்படுகிறது?**

'கன்ஜங்டிவைடிஸ்' கண் தொற்று நோய், சென்னையில் 1918ம் ஆண்டு அதிக பாதிப்பை ஏற்படுத்தியதிலிருந்து, தமிழ்நாட்டில் 'மெட்ராஸ் ஐ' என்று அழைக்கப்படுகிறது.

**எதனால் ஏற்படுகிறது?**

பாக்டீரியா, வைரஸ் மற்றும் பூஞ்சை போன்றவற்றில் ஏதேனும் ஒன்றால் ஏற்படக்கூடிய தொற்று நோய் இது. இந்தத் தொற்று பெரும்பாலும், சுத்தமின்மையாலும், நோய் எதிர்ப்பு சக்தி குறைவாக இருப்பதாலும் ஏற்படக்கூடியது. குழந்தைகளில் ஆரம்பித்து வயதானவர்கள் வரை எல்லா வயதினருக்கும் ஏற்படும்.

**அறிகுறிகள் என்னென்ன?**

கண்ணில் நீர் வடிந்துகொண்டே இருக்கும். கண் எரிச்சல், கண் வலி, கண்ணில் உறுத்தல் ஏற்படும். கண் சிவந்து போகும். கண்ணில் அழுக்கு இருந்து கொண்டே இருக்கும். காலையில் கண் விழிக்கும்போது கண்களைப் பிரிக்க முடியாத அளவுக்கு ஒட்டிக்கொள்ளும்.


**தொற்று எத்தனை நாள்கள் நீடிக்கும்?**

'மெட்ராஸ் ஐ' தொற்று பெரும்பாலும், அதன் அதிகபட்ச பாதிப்பு நிலைக்குச் சென்று, பின்னர்தான் குறையும் என்பதால் அதிகபட்சமாக ஒரு வாரம் இருக்கும். சிலருக்கு, கண் கூசுதல் போன்ற பிரச்சனைகள் இன்னும் சில நாட்களுக்கு நீடிக்கலாம்.

**சிகிச்சைகள் என்னென்ன?**

மேற்கூறிய அறிகுறிகள் தென்பட்டால், உடனடியாக மருத்துவரை அணுக வேண்டும். பாக்டீரியா, வைரஸ், பூஞ்சை

என என்ன மாதிரியான தொற்று ஏற்பட்டுள்ளது என்பதைக் கண்டறிந்து,



அதற்கேற்ற மருந்துகளை அவர் பரிந்துரைப்பார். பாக்டீரியா தொற்று ஏற்படுபவர்களுக்கு ஆன்டிபயாடிக் மருந்துகளும், வைரஸ், பூஞ்சை மூலம் தொற்று ஏற்படுபவர்களுக்கு அவர்களது பிரச்சனையின் தீவிரத்தை பொறுத்து மற்றும் ஸ்டீராய்டு ஆன்டிஇன்ஃப்ளமேட்டரி (Anti inflammatory) மருந்துகளும் வழங்கப்படும்.

நல்ல சத்துள்ள உணவுகளைச் சாப்பிடுவதுடன், மருத்துவ ஆலோசனையின் பேரில் மல்டி வைட்டமின் மருந்துகளை எடுத்துக்கொள்ளலாம். வெளிப்புற தூசை தவிர்க்க, கருவிழி பாதிக்கப்படாமல் இருக்க கண்ணாடி அணிந்துகொள்ளலாம். கண்ணில் நீர் வந்து கொண்டே இருக்கும் என்பதால், அதைத் துடைக்க சுத்தமான துணி, டிஷ்யூ என்று பயன்படுத்தலாம்.

**தொற்று பரவலை தடுக்க... செய்ய வேண்டியவை என்னென்ன?**

ஒருவரது ‘மெட்ராஸ் ஐ’ பாதித்த கண்களை பார்ப்பதன் மூலம் மற்றவர்களுக்கு இது தொற்றாது. தொற்று பாதித்தவர் தன் விரல்களால் தன் கண்களைத் தொட்டு. அதே விரல்களால் மற்ற பொருள்கள், இடங்கள் எனத் தொட்டு, அவற்றை மற்றவர்கள் தொட நேரிடும்போது இது பரவும். எனவே, தொற்று பாதித்தவர் தன் விரல்களைக் கண்களில் வைக்கக் கூடாது. கண்ணாடி அணிவது, விரலை அடிக்கடி கண்ணுக்குக் கொண்டு செல்லாமல் தடுக்க உதவும். அடிக்கடி கைகழுவி சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும். தொற்றுக்கு உள்ளானவர் பயன்படுத்தும் துணிகள் மற்றும் பொருள்களை தனியாக வைத்துக்கொள்ள வேண்டும்.

**செய்ய வேண்டியவை, செய்யக் கூடாதவை..?**

கண்களை அடிக்கடி தொட்டுகொண்டே இருக்கக் கூடாது. கூட்டமாக இருக்கும். இடத்தில், தூசு அதிகமாக இருக்கும் இடங்களுக்குச் செல்வதை தவிர்க்க வேண்டும். வீட்டில், மெட்ராஸ் ஐ வந்த ஒருவருக்குப் பயன்படுத்திய மருந்தை, மற்றவர்களுக்கும் தொற்று ஏற்படும் பட்சத்தில் அதையே பயன்படுத்தாமல் மருத்துவ ஆலோசனைக்குச் செல்ல வேண்டும். குறிப்பாக, கடைகளில் தானாக மருந்து வாங்கி சுயவைத்தியம் பார்க்கக் கூடாது. பள்ளி, கல்லூரி, அலுவலகம் செல்பவர்கள், விடுப்பு எடுத்து வீட்டில் இருக்க முயலவும்.

**‘மெட்ராஸ் ஐ’ ஏற்படக்கூடிய**

**ஆபத்துகள்..?**

இந்தப் பிரச்சனையை ஆரம்பத்திலேயே கவனிக்க வேண்டும். இல்லையெனில் கண் பார்வையில் பிரச்சனை ஏற்பட்டு, பார்வை பறிபோகும் அபாயம் வரை ஏற்படலாம். மேலும், இந்தத் தொற்று மூளை வரை பரவியும் பிரச்சனையை ஏற்படுத்த வாய்ப்புள்ளது என்பதால் கவனம். ஒருவருக்கு ஒருமுறை மெட்ராஸ் ஐ ஏற்பட்டால், மீண்டும் ஏற்படாது என்று கூறமுடியாது. ஒருவருக்கு எத்தனை முறை வேண்டுமென்றாலும் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

கண்களைக் காப்போம் கருத்தாக!



## புற்றுநோயை ஏற்படுத்தும் குழந்தைகள் பவுடர் வழக்கில் சிக்கியது ‘ஜான்சன் அண்டு ஜான்சன்’

அமெரிக்க பன்னாட்டு நிறுவனமான, ‘ஜான்சன் அண்டு ஜான்சன்‘ தயாரிக்கும் குழந்தைகளுக்கான பவுடரில் புற்று நோயை ஏற்படுத்தும். ஆஸ் பெஸ்டாஸ்‘ துகள்கள் இருப்பதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளதையடுத்து, அந்நிறுவனம் பிரிட்டனில் வழக்குகளை எதிர்கொண்டுள்ளது.




அமெரிக்காவின் முன்னணி நுகர்வோர் பொருள் தயாரிப்பு நிறுவனமான, ‘ஜான்சன் அண்டு ஜான் சன்‘ நிறுவனம் தயாரித்து விற்பனை செய்து வரும் குழந்தைகளுக்கான, டால்கம் பவுடரில், ஆஸ் பெஸ்டாஸ்‘ துகள்கள் கலந்திருப்பதாக புகார்கள் எழுந்துள்ளது.

இத்துகள்கள் மனிதர்களுக்கு புற்றுநோய் ஆபத்தை ஏற்படுத்தும் என கூறப்படுகிறது. இந்நிலையில், இந்த பவுடர்களில் ஆபத்தை ஏற்படுத்தும் துகள்கள் இருப்பது தெரிந்தே விற்பனை செய்ததாக கூறி, அந்நிறுவனத்தின் மீது பிரிட்டனில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

‘டாஸ்க்‘ எனப்படும், இயற்கையாக கிடைக்கும் ஒருவகை கனிமத்தில் இருந்து டால்கம் பவுடர்கள் தயாரிக்கப்படுகின்றன. இது பெரும்பாலும், ‘ஆஸ்பெஸ்டாஸ்‘

படிமங்களுக்கு அருகில் காணப்படுவதால், டால்க் கனிமத்தை தோண்டி எடுக்கையில் ஆஸ்பெஸ்டாஸ் படிமங்களுடன் கலப்பதற்கான வாய்ப்புகள் உள்ளன.

இவ்வாறு எடுக்கப்படும் கனிமங்கள் போதிய சுத்திகரிப்பின்றி பயன்படுத்தப்பட்டால், கனிமத்துடன் கலந்துள்ள ஆஸ் பெஸ்டாஸ் துகள்கள், புற்றுநோயை உண்டாக்கும் என கூறப்படுகிறது.

கடந்த, 1960ம் ஆண்டு முதலே, ஜான்சன் அண்டு ஜான்சன் பவுடரில் இந்த துகள்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டு வழக்கு தொடர்ந்ததாக கூறப்படுகிறது. இருப்பினும், இதுகுறித்து நிறுவனம் எச்சரிக்கை விடுக்காமல் தொடர்ந்து தன் தயாரிப்பு துய்மையானது மற்றும் பாதுகாப்பானது சந்தைப்படுத்தியதாக கூறப்படுகிறது.

கடந்த, 1973ம் ஆண்டு பவுடரில் பாதிப்பை ஏற்படுத்தும் கலவைகள் இருந்ததற்கான மிகச்சிறிய தடயங்கள் இருந்ததாக குறிப்பிட்டதை வழக்கு தொடர்ந்தவர்கள் குறிப்பிடுகின்றனர். பிரிட்டனில் தொடரப்பட்ட வழக்கில் கிட்டத்தட்ட 3000 பேர் சம்பந்தப் பட்டுள்ளதாக கூறப்படுகிறது. அதே வேளையில், அமெரிக்காவில் இதுபோன்று தொடரப்பட்ட வழக்குகளில், 67,000க்கும் மேற்பேட்டோர் பாதிக்கப்பட்டதாக கூறியுள்ளனர்.

இருப்பினும், இந்த குற்றச்சாட்டுகள் அனைத்தையும், 'ஜான்சன் அண்டு ஜான்சன்' நிறுவனம் திட்டவட்டமாக மறுத்துள்ளது. அதன் தயாரிப்புகளில், ஆஸ்பெஸ்டாஸ் துகள்கள் ஒருபோதும் கலந்திருக்கவில்லை என்றும், புற்றுநோயை ஏற்படுத்தவில்லை என்றும் தெரிவித்துள்ளது. அதன் தயாரிப்புகள் எப்போதும் ஒழுங்குமுறை விதிகளை பூர்த்தி செய்துள்ளதாக நிறுவனம் கூறியுள்ளது.

இந்நிலையில், இவ்வழக்கு பிரிட்டனின் வரலாற்றில் மிகப்பெரிய வழக்காக மாறக்கூடும் என்றும், இதற்கான இழப்பீடாக பல நூற்றுக்கணக்கான மில்லியன் பவுண்டுகள் வரை எட்டும் எனவும் வழக்கறிஞர்கள் கூறுகின்றனர்.

தொடரும் சட்ட நெருக்கடிகள் காரணமாக, 'ஜான்சன் அண்டு ஜான்சன்' நிறுவனம் டால்க் அடிப்படையிலான குழந்தைகள் பவுடர் விற்பனையை, 2020ல் அமெரிக்காவிலும், பிரிட்டன் உள்ளிட்ட சில நாடுகளில் 2023ம் ஆண்டிலும் நிறுத்திவிட்டு, அதற்கு பதிலாக சோள மாவு அடிப்படையிலான மாற்று தயாரிப்புக்கு மாறியுள்ளது.

பிரிட்டன் வழக்கு 'ஜான்சன் அண்டு ஜான்சன் டால்க் தயாரிப்புகள் மீதான உலகளாவிய சந்தேகங்களையும், சட்டரீதியிலான அழுத்தத்தையும் மேலும் அதிகரித்துள்ளது.

தகவல் அறியும் உரிமைச் சட்டம்
Rights To Information

# தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்படி தகவல் வேண்டுவோர் கவனிக்க வேண்டியவை..

உறுதியாக யாருக்கு அனுப்புவது என்று தெரியாவிட்டாலும் பரவாயில்லை. மிக உத்தேசமாக எந்த அலுவலரிடம் இருந்து தகவல் கிடைக்கலாம் என நம்புகிறீர்களோ, அந்த அலுவலர் முகவரிக்கு உரிய கட்டணத்துடன் விண்ணப்பம் அளிக்கலாம். நாம் அனுப்புகிற விண்ணப்பத்தை அந்த அலுவலருக்கானது அல்ல என்றாலும் அதைப் பெறும் பொதுத்தகவல் அலுவலர், அதனை சம்பந்தப்பட்ட அலுவலருக்கு 3 நாட்களில் மாற்றம் செய்து அனுப்பி வைக்க வேண்டும். இது குறித்து விண்ணப்பித்தவருக்கும் 1 தகவல் அளிக்க வேண்டும்.

தகவலைக் கேட்கும் காரணத்தைத் தெரிவிக்க வேண்டிய அவசியமில்லை. தகவலைக் கேட்கும் விண்ணப்பத்தை தமிழில் எழுதலாம். எந்த வடிவிலும் (நகல், அச்சிட்ட படிவம், மின்னஞ்சல், பிளாப்பி, சி.டி) எந்த வகையிலும் தகவலைப் பெற உரிமை உண்டு.

தகவலுக்கான ஒவ்வொரு விண்ணப்பமும் 10 ரூபாய் கட்டணத்துடன் அனுப்பப்பட வேண்டும். இது ரொக்கமாகவோ, வரைவுக் காசோலையாகவோ, கருவூலச் சீட்டு அல்லது வங்கி வரைவோலையாகவோ, நீதிமன்றக் கட்டண வில்லையாகவோ இருக்கலாம். வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழ்பவருக்குக் கட்டணம் இல்லை.

கேட்கப்படும் தகவல்கள் ஏ4, ஏ3 அளவுதாளில் இருந்தால், ஒவ்வொரு பக்கத்திற்கும் 2 ரூபாய். அச்சிடப்பட்ட படிவத்தில் தகவல் அல்லது மின்னனு வழியான சி.டி போன்றவற்றிற்கு வேறுபடும். ஏற்றாற்போல் கட்டணம் குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் தகவல் அளிக்கத் தவறினால், மேற்கண்ட கட்டணமின்றி விண்ணப்பதாரருக்கு அத்தகவலை இலவசமாக வழங்க வேண்டும். இக்கட்டணத்தை முன்கூட்டி திட்டமிட்டோ அல்லது தகவல் அளிக்கப்படும் போதோ அனுப்பலாம்.

மத்திய அரசு தரவேண்டிய தகவல் என்றால், டி.டி, போஸ்டல் ஆர்டரிலும், மாநில அரசென்றால் நீதிமன்றக் கட்டணவில்லை, டி.டி, அல்லது நேரிடையாக பணமாகவோ செலுத்த வேண்டும்.

விண்ணப்பத்தில் அனுப்புநரான உங்களது பெயர் உட்பட முழு முகவரி எழுத வேண்டும். என்ன காரணத்திற்காக என்று குறிப்பிட வேண்டிய அவசியமில்லை. 'தகவல் அறியும் உரிமைச் சட்டப்படி இந்தத் தகவலைக் கோருகிறேன்' என்று குறிப்பிட வேண்டும். பெறுநரில் மாநில / மத்திய பொதுத்தகவல் அதிகாரி என்று குறிப்பிட்டு, தகவல் கிடைக்கும் உரிய முகவரியைக் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும்.

விலக்களிக்கப்பட்ட பட் பட்டியலில் உள்ள நாட்டின் இறையாண்மையை பாதிக்கக் கூடிய வகையில் கேட்கப்படும் தகவல்கள், குற்றப்புலனாய்வுத் துறை, கடலோரக் காவல்படை, விஜிலென்ஸ் துறை போன்ற குறிப்பிட்ட துறை சார்ந்த தகவல்களைப் பெற அனுமதி இல்லை.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் மத்திய அரசுக்கு அனுப்ப வேண்டிய விண்ணப்பங்களை தலைமை அல்லது துணை தபால் அலுவலகங்களில் பதிவுத் தபாலுக்கான கட்டணமின்றி இலவசமாக அனுப்பலாம்.

# சமூக ஆர்வலர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கூடாது.. உச்ச நீதிமன்றம் அதிரடி தீர்ப்பு..!!



சென்னை, ஜுலை 5 சமூக நடவடிக்கை பற்றியோ அல்லது அரசியல் கட்சிகளின் நடவடிக்கை பற்றியோ சமூக ஆர்வலர்கள் உள்ளிட்டவர்கள் பதிவிட்டால் வழக்குப் பதிவு, கைது உள்ளிட்ட எவ்வித நடவடிக்கையும் எடுக்கக்கூடாது என உச்ச நீதிமன்றம் அதிரடி உத்தரவிட்டுள்ளது.

நீதிமன்ற பிரிவு 66 ஏ யின் படி சமூக ஆர்வலர்கள் உள்ளிட்டவர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கக்கூடாது என்று தீர்ப்பளித்துள்ளது.

நாட்டில் சமூக வலை தளங்களில் ஒருவரைப் பற்றியோ அல்லது சமூக நடவடிக்கை பற்றியோ அல்லது அரசியல் கட்சிகளின் நடவடிக்கை பற்றியோ அல்லது ஆளுகின்ற அவர்களை பற்றியோ பதிவிட்டால் இதற்கு முன்பு காவல் துறையில் புகார் அளித்து கைது செய்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வந்தது. இது தொடர்பாக உச்ச நீதிமன்றத்தின் கவனத்திற்கு எடுத்து செல்லப்பட்டது.

இது சம்பந்தமான வழக்கு உச்ச நீதிமன்றத்தில் வந்தது. அப்போது சமூக உள்ளிட்டவர் ஆர்வலர்கள், உள்ளிட்டவர்கள் சமூக வலைத் தளத்தில் அரசு துறைகள், அரசு அலுவலர்களின் செயல்கள், சமூக சார்ந்த தகவல்கள், செய்திகள், போன்ற பதிவுகளை சமூக ஊடகங்களில் பதிவிட்டால் சமூக ஆர்வலர்கள், உள்ளிட்டவர்கள் வழக்கு பதியக்கூடாது, கைது செய்யவும் கூடாது அவர்கள் மீது எவ்வித புகாரும் பதியவும் கூடாது என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது...

நீதிமன்ற பிரிவு 66 ஏ யின் படி அவர்கள் மீது எந்த நட வடிக்கையும் எடுக்கக்கூடாது என்று தீர்ப்பளித்துள்ளது.

அதனால் சமூகத்தில் நடக்கும் அவலங்கள் மற்றும் தவறுகளை சுட்டிக் காட்டி அநியாய அக்கிரமங்களை வெளிச்சம் போட்டு அநீதிக்கு எதிராக போராடி தவறுகளை சுட்டிக்காட்ட இனி தடை ஏதுமில்லாமல் சமூக ஆர்வலர்கள் உள்ளிட்டவர்கள் எவ்வித தங்கு தடையுமின்றி சமூக பணி யாற்றலாம்.

117 Since 1908 Traditional by Generations

BG Naidu Made from Farm Fresh Cow Milk 100% Natural

Traditional by Generations

BGN EST 1908

# BG நாயுடு

ஸ்வீட்ஸ் | ஸ்நாக்ஸ் | பேக்கரி

சொந்த பண்ணை பாலில் தயாராகும் இனிப்புகள்...




BGN 1908 **BG Naidu** Traditional by Generations

**BG Naidu Sweets Pvt Ltd**

Head Office: 29–K, Elango Street, Sangliandapuram
Trichy 620001. sales@bgnaidusweets.com
www.bgnaidusweets.com | /bgnaidusweets

46+ BRANCHES @ TRICHY, MADURAI, PUDUKKOTAI, PERAMBALUR, DINDIGUL, THANJAVUR, PATTUKOTTAI & KARAIKUDI

For Corporate Order & Bulk Orders: +91 9514686868

fssai Lic No. 12418028000292

115+ years | 46+ Branches BG Naidu One Million+ Sweet Customers | Times Business Awards Winner 2021 | BG Naidu Made from Farm Fresh Cow Milk 100% Natural


HAPPY DIWALI
ஜொலி ஜொலிக்கும்
தீபாவளி
Rajmahal's
Silk Story
A Tale of Exclusive Weaves
K.K. Nagar, Madurai.
திருமணப் பட்டு ஜவுளிகளுக்கு...
ராஜ்மஹால்
பட்டு * ஜவுளி * ரெடிமேட்ஸ்
47&48 கீழவெளி வீதி, மதுரை -1.
போன் : 2666666, 72000 07373
தொட்டுத் தொடரும் ஒரு பட்டுப் பாரம்பரியம்.